உ


# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௰௫ | பிரமாதி, பங்குனி | மலர் ௰உ |
|---|---|---|


உ

## சுந்தரர் செந்தமிழ்


திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்


"சுந்தரர் செந்தமிழ்" எனும் இத்தொடரில் உள்ள சுந்தரர் என்பது சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய ஆலால சுந்தரரையும், செந்தமிழ் என்பது அவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களையும் குறிக்கும். இஃது ஆறும் வேற்றுமைச் செய்யுட்கிழமை.

திருக்கயிலையில் வெள்ளநீர்ச்சடை மெய்ப்பொருளாகிய சிவபெருமானுக்கு மலர்மாலையும் திருநீறும் எடுத்தளையும் அணுக்கத் தொண்டராகிய ஆலாலசுந்தரரும், அவ்விறைவன் பங்கிலுறையும் உமைப்பிராட்டியார்க்குப் பொதுக்கடிந் துரிமை செய்யும் பூங்குழற் சேடிமார் ஆகிய கமலினி, அனிந்திதை என்பவர்களும் மாதேவன் கட்டளையால் தென்றமிழ் நாட்டிலே வன்றொண்டராகவும், பரவையார், சங்கிலியாராகவும் தோற்றஞ் செய்தனரெனத் திருத்தொண்டர் புராணம் கூறுநிற்கும். சுந்தரர்க்கு, அவர் நிலவுலகிலே தோன்றிய ஞான்று இடப்பெற்ற நம்பியாரூரர் என்னும் பெயரும், இறைவன் அவரைத் தடுத்தாட்கொண்ட பொழுது எதிர்த்து வன்மை பேசினமையின் எய்திய வன்றொண்டர் என்னும் பெயரும், அவர் திருவாரூரில் புற்றிடங்கொண்ட பிரானை வணங்கி நன்புலன் ஒன்றி இன்பவெள்ளத்தில் மூழ்கி இன்னிசைத் தமிழ்மாலை பாடிய காலை "தோழமையாக

உனக்கு நம்மைத் தந்தனம்'' என்று இறைவன் அருளின மையாற் போந்த தம்பிரான்றோழர் என்னும் பெயரும், நாவலர் கோன் என்பது முதலிய பெயர்களும் புராணத்திற் பயில வழங்குமேனும் வழக்கிலே மக்கள் பலரானும் நன்கறியப் படுவ தாதல் கருதிச் சுந்தரர் என்னும் பெயர் ஈண்டுக் கொள்ளப் பெற்றது. இஃது ஆலால சுந்தரர் என்பதன் பகுதிப் பெயர்க் கோளே. திருக்கயிலையிற் சிவத்தொண்டர்க்கு வழங்கிய அப் பெயர் அவரது தோற்றமாகிய நம்பியாரூரர்க்கும்உரியதாயிற்று. அருண் மொழித் தேவரும், திருக்கூட்டச் சிறப்பின் இறுதிச் செய்யுளில்,

"இந்த மாதவர் கூட்டத்தை யெம்பிரான்
அந்தமில் புகழ் ஆலால சுந்தரன்
சுந்தரத் திருத்தொண்டத் தொகைத் தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம்''

என இப்பெயரை ஆண்டுள்ளமை காண்க. இனி, சுந்தரர் வர லாற்றை எடுத்துரைப்பது இவ்வுரையின் நோக்கமன்று; அவர் பாடிய தேவாரத் திருப்பாட்டுக்களினால் அறியலாகும் அவ ருடைய வாழ்க்கைப் பண்புகளினும், நவையறு நன்பொருள் களினும் சிலவற்றை எடுத்துக் காட்டுவதே இதன் நோக்கமாம். எனினும் அவர் வரலாற்றின் குறிப்புக்கள் சிலவற்றை முதற்-கண் கருத்தில் இருத்துதல் நன்றாகும்.

ஆலால சுந்தரர் இவ்வுலகிலே திருநாவலூர் என்னும் திருப் பதியில் ஆதிசைவராகிய சடையனார்க்கு இசைஞானியார்பால் தீதகன்றுலகமுய்யத் திருவவதாரஞ் செய்தார். நரசிங்கமுனையர் என்னும் பல்லவ வேந்தரால் மகன்மை முறையுடன் சீரும் சிறப்புமாக வளர்க்கப்பெற்றார். மாலயன் காணா ஆலமர் செல்வ னால் வெண்ணெய்நல்லூரில் அற்புதப் பழ ஆவணங்காட்டி ஆட்கொள்ளப்பெற்றார். அவ்விறைவன் அருள்வழி நின்று பரவையாரையும் சங்கிலியாரையும் திருமணம் புரிந்தார். தம் பிரான்றோழராய் என்றும் மணக்கோலந்தாங்கி இன்ப விளை யாட்டுக்கள் நிகழ்த்தினார். சேரமான்பெருமானைத் தோழமை கொண்டார். மூவேந்தரும் உடனிருந்துபரவத் திருப்பதிகம் பாடினார். மாதொருபாகனைத் தூதெனக் கொண்டார். அவ் விறைவனாற் பொன்னும் பொதிசோறும் பெற்றார், மற்றும் பற்பல அற்புதம் நிகழ்த்தினார். இறுதியில் இறைவன் அருளிப் பாட்டால் களையா உடலோடு வெள்ளானை மேற்கொண்டு சேர மானுடனாகத் திருக்கயிலையுற்றார்.

இவை பலவற்றையும் அறுதியிடும் உறுதியுள்ள சான்றுகள் அவர் பாட்டுக்களிலிருந்தே காட்டுதல் சாலும்; அவற்றுட் சில பின் வருவன :—

" நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக்காட் செயுமூர்அணி நாவலூர் "

" என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்,
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன் "

" வெண்ணெய் நல்லூரில், அற்புதப் பழ ஆவணங்காட்டி
அடியனு என்னை ஆளது கொண்ட, நற்பதத்தை "

" மாழையொண்கண் பரவையைத் தந்தாண்டானை "

" சங்கிலியோ டெனைப் புணர்த்த தத்துவனை "

" அடியேற்கு எளிவந்த, தூதனைத் தன்னைத்
தோழமை அருளித் தொண்டனேன்
செய்த துரிசுகள் பொறுக்கும், நாதனை "

" பொன்னைத்தந்து என்னைப் போகம் புணர்த்த நன்மையினர் "

" முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த "

இவ்வாற்றால் இவரது இன்பம் நிறைந்த பெருமித வாழ்க்கையின் இயல்பு புலனாகா நிற்கும். இத்துணைப் பெருமையில் எத்துணை எளிமை பொருந்தியுள்ள தென்பதனைப் பின்னர் நோக்குதும்.

முதற்கண், இவரது ஆழ்ந்தகன்ற கல்வியின் திறத்தை ஆய்ந்து காண்டல் கடனும். கல்விகற்பார்க்கு அதில் ஓர்இன்பம் தோன்றுதல் வேண்டும். அஃதின்றேல், கல்வியில் உண்மையான ஈடுபாடும், அதனாற் கல்வி நிரம்புமாறும் உளவாகா.

" தாமின்புறுவ துலகின்புறக் கண்டு காமுறுவர் " என்றும்,

" நவில்தொறும் நூல்நயம் போலும் " என்றும்

தெய்வப்புலவரும் கூறுவர்.

நம் சுந்தரர்க்குக் கல்வி எங்ஙனம் இனித்தது என்பது, இன்பமே யுருவாகிய இறைவனைக் குறித்து, அவர்,

" கற்ற கல்வியினும் இனியானை "

எனக் கூறுவதனால் இனிது விளங்கும். இங்ஙனம் பொதுப் படக் கல்வியை உவமங் கூறியதன்றி,

" பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் " என்றும்

" பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே " என்றும்

சிறப்புவகையால் தமிழின் இனிமையை இறைவன் இன்பொடு சார்த்தியுரைத்தலின் தமிழ்க் கல்வியானது அவர்க்கு எல்லையில்லா இன்பினை அளித்ததாகல்வேண்டும்.

விழுப்பமுடைய நுண்பொருட் கல்வியையன்றிப் பருப் பொருட்டாய உலகியற் கல்வியையும் அவர் புறக்கணியாது கற்றனர் என்பது, திருநாட்டுத்தொகைப் பதிகத்தில் பற்பல திருப்பதிகளைக் கூறி வருமிடத்து, அவற்றுட் சிலபதிகள் அமைந்துள்ள உள்நாடுகளை (சோணாடு முதலியவற்றின் உட் பிரிவுகளை)யும் குறிப்பிட்டு, "மருகல்நாட்டு மருகல், கொண்டல் நாட்டுக் கொண்டல், குறுக்கை நாட்டுக் குறுக்கை, வெண்ணிக் கூற்றத்துவெண்ணி, நாங்கூர் நாட்டு நாங்கூர், நறையூர் நாட்டு நறையூர், மிழலை நாட்டு மிழலை, வெண்ணிநாட்டு மிழலை, பொன் னூர் நாட்டுப் பொன்னூர், புரிசை நாட்டுப்புரிசை, வேளார் நாட்டு வேளூர், விளத்தூர் நாட்டு விளத்தூர்" என்று உரைத்த வினின்று அறியலாகும்.

திருக்குறள், நாலடியார் முதலிய பழந்தமிழ் நூல்களில் நம்பியாரூரர்க்கிருந்த பயிற்சியும், மதிப்பும், அவர், திருநெல் வாயில்-அரத்துறைப் பதிகத்தில்,

"அகர முதலி னெழுத்தாகி நின்றாய்"

"பொறிவாயிலிவை யைந்தனையும் அவியப்பொருது
உன்னடியே புகுஞ் சூழல் சொல்லே"

"பிறவிக்கடல் நீந்தியேறி அடியேன் உய்யப்
போவதோர் சூழல் சொல்லே"

"உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி"

எனத் திருக்குறளில் ஒரு நான்கு பாக்களின் கருத்தையும்,*

"மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி"

என நாலடிச் செய்யுள் ஒன்றின் கருத்தையும் தழுவிப் போற் றுதலான் அறியப்படும்.

மற்றும், திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம் ஒன்றே தம்பிரான் றோழரின் பேராராய்ச்சியைப் புலப்படுக்கும் கருவியாதல் அமையும். பற்பல நிலங்களில் பல்வேறு காலத் திருந்த நாயன்மார் பலரையும் ஒருங்கே முதற்கண் அறிவிப்பது இப்பதிகமேயன்றோ? திருத்தொண்டர் பலருடைய வரலாறு களையும் முதன்முதல் அறிந்து கொள்ளுதற்கு எவ்வளவு சிறந்த ஆராய்ச்சி நிகழ்ந்திருத்தல்வேண்டும்? அடியார்களின் வரலாறு களைச் செவ்வன் அறிந்திருப்பினன்றி அவர்கள்பால் அன்பும், அவர்களைப் பரவுதற்கண் ஆர்வமும் மனவெழுச்சியும் நிகழா வன்றே? எனவே, திருத்தொண்டத் தொகையானது அடியார்

---

* திருக்குறளின் கருத்துக்கள் இவற்றில் எங்ஙனம் அமைக்கப் பெற்றுள்ளன என்பது தமிழ்ப்பொழிலில் முன்னரே என்னால் விளக்கி எழுதப்பெற்றுளது.

களின் வரலாற்றை விளங்க உரைத்திலரேனும் வன்றொண்டப் பெருந்தகை நன்கனம் அறிந்திருந்தாராதல் தேற்றம். அப்பதிகத்தில்,

" ஏனாதிநாதன்றன் அடியார்க்கு மடியேன்"

" முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்"

எனச் சிலரைப் பெயரளவிலும்,

" கடவூரிற் கலயன்றன் அடியார்க்கு மடியேன்"
" அலைமலிந்த புனன்மங்கை ஆனாயற் கடியேன்"

எனச் சிலரை அவர்கள் நிலவிய ஊரொடு சார்த்தியும்,

" இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்"
" அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக் குமடியேன்"

எனச் சிலரை அவர்கள் கொண்ட படைக்கலம் முதலியவற்றால் விசேடித்தும்,

" மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்"
" வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்"

எனச் சிலரை அவர்கள் புரிந்த திருத்தொண்டு, செயல் என்பவற்றொடு கூட்டியும், மற்றும் சிற்சிலரை வேறு சிற்சில வகையாற் குறிப்பிட்டும் அவர் பரவியுள்ளார். மற்றும்,

" இல்லையே என்னாத இயற்பகைக்கு மடியேன் "
" வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன் "
" நாட்டமிகு தண்டிக்கும்.........அடியேன் "

என்பவற்றில் கொடுக்கப் பெற்றுள்ள அடைமொழிகள் அவ்வடியார்கள் வரலாற்றின் உயிர் நிலையாய உண்மைகளைத் தெரிவித்தல் கண்கூடு. உலகியலில் வழங்குதற் கேற்றதல்லாத தொன்றினையும் வழங்கினாராதல் தோன்ற "இல்லையேஎன்னாத" என்றும், மாற்றானது வாளுக்கிலக்காகி நிறைந்த செங்குருதி சோர வீழ்கின்ற நிலையினும் "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" எனத் தாம்கொண்ட கொள்கைபிழையாது, அவனைச் சிவனடியாரெனவே பேணிய தவவென்றியுடையா ரென்பது தோன்ற "வெல்லுமா மிகவல்ல" என்றும், பிறவியிலே கண் காணாரா யிருந்தும் அக நாட்டமுடையராய்த் திருக்குளம் தோண்டுதலாகிய திருப்பணியை அரிதிற் புரிந்து, அதற்கிடர்

செய்து தம்மைக் குருடரென எள்ளிய அமணர் கண்ணிழக்க, வாவியில் மூழ்கி மலர்க்கண் பெற்றெழுந்த சீரடியார் என்பது புலப்பட 'நாட்டமிகு' என்றும் அடைபுணர்த்தோதியமாண்பினை எங்ஙனம் அறிந்தேத்த வல்லேம்! இன்னும், வேடர்குலத்திலே தோன்றி, நன்னூற்கல்வி நவின்றறியாத கண்ணப்பரைக் குறித்து,

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்"

என்று கூறியது, அவர் பழம் பிறப்பிலேயே கலைகளெல்லாம் நிறைந்தாராதல் கருதியோ, கலைகளின் பயனாய அன்பின் மேம்பாடு துணிந்தோ, அவரது சீர் கலைகள் பலவற்றுள்ளும் நிலவுமாறு நினைந்தோ ஆதல் வேண்டும்.

திருத்தொண்டர்களின் வரலாறுகள் சுந்தரரால் நுண்ணிதின் ஆராயப்பெற்றவை என்பதற்கு அவர் திருப்பாட்டுக்களில் மற்றும்பல சான்றுகள் உள்ளன. அவர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருபெருமக்களின் தேவாரங்களைப் பன்முறை ஓதி நன்காராய்ந்து செம்பொருள் கண்டவர் என்பதனையும், அதனாலும் பிறவாற்றானும் அவ்விருவர் வரலாற்றினையும், ஏனைய அடியார்கள் வரலாறுகளையும் நன்கு தெளிந்தவர் என்பதனையும் அவர் பாட்டுக்கள் காட்டா நிற்கின்றன. நாவுக்கரசர் பாடிய பாவின் தொகையை,

"இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்
ஈன்றவன் திருநாவினுக் கரையன்"

என்று முதற்கண் வெளிப்படுத்தவர் நம் தம்பிரான்றோழரே.

"ஊனமில் காழிதன்னுள் உயர்ஞானசம் பந்தர்க்கன்று,
ஞானம் அருள்புரிந்தான் நண்ணுமூர்நனி பள்ளியதே"

என்பதனால், சம்பந்தர் காழியுள் ஞானம் பெற்றதனையும்,

"திருமிழலை, இருந்துநீர் தமிழோடிசை கேட்கு
மிச்சையாற் காசுநித்தல் நல்கினீர்"

என்பதனால், அரசரும் ஞானக்கன்றும் வீழிமிழலை இறையவர்பால் படிக்காசு பெற்றதனையும் அவர் வெளிப்படுத்துள்ளார். பல கூறுதல் வேண்டா.

"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக்கரையன் நாளைப்போவானும்
கற்றசூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம் புல்லன் என்றிவர்கள்
குற்றஞ் செய்யினும் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழலடைந்தேன்

பொற்றிரள் மணிக்கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூருளானே"

என்னும் திருப்பாட்டொன்றே அடியார்களின் வரலாற்று நுட்பங்கள் அவரால் எங்ஙனம் அறியப்பட்டுள்ளன என்பதற்கு உறுசான்றாகும். இவையனைத்தும் ஓர்ந்தன்றோ "நுணங்கிய கேள்வி மேலோன்" என்று சேக்கிழார் பெருமான் இவரைப் போற்றுவாராயினர்; மற்றும் இவர் "நான்மறை யங்கம் ஓதிய நாவன்" என்றுதம்மைக் கூறிக் கொள்வதனாலும், பிறவாற்றாலும் இவரது வடமொழிப் புலமை போதரும் எனினும், தமிழின் சுவையே இவருள்ளத்தைக் கொள்ளை கொண்டதென்பதும், தமிழிலேதான் இவருக்கு எல்லையிகந்த பற்றிருந்தது என்பதும் மேல்எடுத்துக் காட்டிய,

"பண்ணார் இன்றமிழாய்"
"பண்ணிடைத் தமிழொப்பாய்"

என்பவற்றாலும், மற்றும் இறைவனைக் குறித்து,

"தமிழோடிசை கேட்கு மிச்சையாற் காசுநித்தல் நல்கினீர்"
"கலைமலிந்த தேன்புலவர் கற்றோர் தம்
இடர்தீர்க்குங் கருப்பறியலூர்"
"தண்டமிழ் நூற்புலவாணர்க் கோரம்மானே"
"சேந்தமிழ்த் திறம் வல்லிரோ"

என்றிங்கனம் பாராட்டுவதனாலும், ஆளுடைய பிள்ளையார் வேதம் முதலிய அனைத்தையும் ஓதாதுணர்ந்த பெருந்தகையாயினும், அவரை,

"நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்"
"நாளும் இன்னிசையாற் றமிழ்ப்பரப்பும் ஞானசம்பந்தன்"

என்று கூறிப் பரவுதலாலும், தாமும் இன்னிசையாற் றமிழே பரப்பினமையாலும் நன்கு துணியப்படும்.

"செந்தமிழ்த் திறம் வல்லிரோ செங்கணரவ முன் கை யிலாடவே
வந்துநிற்கு மிதன்கொலோ"

என்பது செந்தமிழானது அரவின்நஞ்சினைத் தடுக்கும் மந்திரமாம் என்னும் குறிப்பிற்றோ, நச்சுத் தன்மையுடைய அரவும் தமிழிசையைக் கேட்டுமெய்ம்மறந்திருக்கும் என்னும் குறிப்பிற்றோ ஆதல்வேண்டும். சுந்தரரது செந்தமிழ்க் கல்வியின் பெருமைக்கு வேறு கூறுவானேன். கல்வியென்னும் கற்புடை நங்கை பெற்ற செல்வநன்மக்களாகிய அவருடைய அமிழ்த வெள்ளம் போலும் இன்னிசைத் தீந்தமிழ்ப் பாட்டுக்களே சான்றாதல் அமையாவோ?

# காரைக்காலம்மையாரின் கணவன் நிலை

வித்துவான், காஞ்சி. திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள்

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 11, பக்கம் 423)

இனி, கனிகளை வரவிடுத்தோன் கருத்து அதுவாயினும் அவற்றை வரப்பெற்ற அம்மையார் அவற்றை வைத்திருந்து அவன் வந்த பின்னர் அவனுக்கு முன்னர் அளித்துப் பின்னர்த் தமக்கும்பிறர்க்கும் பயன்படுத்தலே முறையாகலின், அவ்வாறே செய்யக் கருதி அவற்றை வைத்திருந்தனர். அவரது கருத்து இவ்வாறிருந்தமையானன்றோ அதற்கு மாறாக அக்கனியை அடியவர்க்குஇடநேர்ந்தபோது சிறிதுதடையுற்று, "விடையவன் றனடியாரே-பெறலரிய விருந்தானாற் **பேறிதன் மேலில்லை**" என எண்ண வேண்டியதாயிற்று. **'பேறிதன் மேலில்லை'** என்றதனால் இதற்கு முன்னர் அம்மையார் ஒருபேற்றினைக் கருதியிருந்தா ரென்பது தேற்றம். அது கனியைக் கணவனை முன்னர் நுகர் வித்துப் பின்னர்த் தாமும் பிறரும் உண்டு உவக்கும் பேறாகும்.

இவ்வாறன்றி அம்மையார் "விடையவன்றன் அடியாரே.... பேறிதன்மேல் இல்லை" என எண்ணியது கனியைஅடியவர்க்குப் படைக்கின் அவன் வெகுள்வன் என எழுந்ததடையை நீக்குதற் கெனின், அதற்குப் **"பேறிதன் மேலில்லை"** என்பது அத்துணைப் பொருத்தமின்று. அன்றியும், அவன் வெகுள்வன் என அம்மை யார் கருதியிருப்பின், அக்கனியை அவன் கருத்துக்கு மாறாக அடியவர்க்குப் படைத்தேயிரார். கைவல்ல அவர் வேறு எவ் வாற்றானுயினும் அடியவரை உணவூட்டி உவப்பித்திருப்பர். எனவே, அவர் அங்ஙனங் கருதியது முன்னர்க் கூறிய காரணத் தாலேயாம். இனிச் சேக்கிழார் "இல்லாளன் **வைக்க** என" எனவும், "கணவன் தான் மனையிடைமுன் **வைப்பித்த**" எனவும் பரமதத்தன் கனிகளை வைக்கும் குறிப்புடையான் போன்று கூறியது அம்மையார் கருத்துப்பற்றி என்க.

பரமதத்தன் மாங்கனியை அடியவர்க்குப் படைத்தலால் வெகுள்வன் என்று அம்மையார் அஞ்சுதல் இலராயின் அவன் மற்றொரு கனியைக் கேட்டபொழுது அவர் நிகழ்ந்ததைக் கூறு தொழிந்தது என்னையெனின், அது அவன்வெகுள்வன் என்னும்

அச்சத்தாலன்று. அங்ஙனங் கொள்ளுதற்குரியகுறிப்பு எதுவும் ஆங்குக் காணப்படவுமில்லை. மற்று, முன்னரே அம்மையார் கணவனை மாங்கனி நுகர்வியாமையாற் சிறிதுகுறையுடையாராக லானும், கணவற்கு உணவூட்டுங்கால் அவனுக்கு விருப்பமான வற்றைக் குறிப்பறிந்து படைத்து அதனை அவன் உண்டு உள்ளம் மகிழ்தலைக்கண்டு தாம் இன்புறுதலே கற்புடை மகளிர்க்கு இயல் பாதலின், அவ்வியல்பின் மேம்பட்ட அம்மையார்க்கு அங்ஙனங் குறிப்பறிந்து மற்றுமொரு கனியினைப் படையாமையேயன்றி, அவன் 'இடுக' எனக்கேட்ட காலையும் இடாது பிறிதொன்று கூற வேண்டி நேர்ந்தமைபெரிதுங் குறைபாட்டை விளைத்திருக்குமாக லானும் அவன் கேட்டஅவ்வமையத்தில் தானே மறுமொழிகூற நாவெழாது திகைத்து மெய்ம்மறந்து பழக்கத்தால் ஏதோ கொண்டுவருபவர்போல உட்சென்றனராதல்வேண்டும். சென்றவர் கனிகொண்டுவாராது வறிதே மீளமாட்டாராய் மேலும் இடருறுவாராயினர். இவ்விடத்தில் அச்சக்குறிப்பின்றி, "அம் மருங்கு நின்றயர்வார் அருங்கனிக் கங்கேன்செய்வார்" எனஅவலக் குறிப்பே காட்டப்பட்டது. இங்ஙனம்பேரிடருழந்தபெருந்தகை யம்மையார், மெய்ம்மறந்து உற்றவிடத்துதவும் விடையவர்தாள் தம்மனங்கொண்டு உணர்வாராயினர். அதனால், அவர் அருளால் தம்கைம்மருங்கு வந்திருந்த அதிமதுரக்கனி ஒன்றைக்கண்டு மகிழ்ந்துகொடுவந்து இட்டார். ஈண்டு அவலத்திற்கு மறுதலையாய உவகைக் குறிப்புக் காட்டப்பட்டது. இதனால் அம்மையார் நிகழ்ந்ததைக் கூறாதது அச்சத்தாலன்று, அன்பால் நிகழ்ந்த திகைப்பானே என்பதாயிற்று.

இன்னும் பரமதத்தன் இரண்டாவது பழத்தையும் 'இடுக' எனச் சுவைஆராமையாற்கேட்டானாயினும், அதனைஅம்மையார் இட்டிருப்பின் முற்றும் உண்டிருப்பன் எனத் துணிதல் இயலாது. இறைவன்தந்த கனியை அவன் உண்டமையால் அது துணியப்படுமெனின், அக்கனியை அவன் முற்றிலும் உண்டான் என்பதற்கில்லை; ஏனெனில் 'அயின்று' என்பதற்குச் 'சிறிதே உண்டு பார்த்து' எனப்பொருள் கொள்ளுதலும் அமையுமாகலின். அன்றியும், அவன், 'இதுதான் முற்றருமாங் கனியன்று' என்றுகூறியதில் 'இதுதான்' என்னும் சுட்டு, பழம் எதிரே உள்ள நிலைக்கே பெரிதும் பொருந்துவதாம். இனி முற்றும் உண்டனனெனக் கொள்ளினும், அவன் 'மூவுலகிற் பெறலரிது' என்றமையான், அதன் சுவை வேற்றுமைகண்டு அப்பழத்தை இன்னதெனத் துணிதற் பொருட்டும், அவ் வரியதொருசுவை மேலீட்டானுமே அதனைநுகர்ந்தனனென்றல்

அமையும். அதனால், தான்விடுத்த அக்கனியை இட்டிருப்பின் நுகர்வான் என்றல் அமையாது.

அற்றாயினும் இரண்டாவது கனி தமக்குக் கிடைத்தது 'ஈசனருள்' என அம்மையார் கூறக்கேட்ட அவன் அதனை நம்பா தொழிதல் தக்கதோ எனின், இறைவன் திருவருளால் நிகழும் செயல்களுக்கும் பிறிதொரு காரணத்தையே எண்ணுவதன்றி எளிதில் அவனருளே என நம்பாதொழிதலும், அங்ஙனமே இறைவனருள் பெற்றாரையும் தம்போல் ஒருவராகக் கருதுவ தல்லது அவரது உண்மைநிலையை யறியாமையும், இவையிற்றை ஐயமின்றிக் கண்கூடாகக் கண்டபின்னர் அச்சங்கொள்ளலும் இன்னோரன்னவை பொதுமக்கட் கியல்பாகலின் அதுபற்றி ஐயமின்றென்க. அவன் சலந்தரு கடவுட்போற்றியதும், வேறு மோர் மனைவியை மணந்துகொண்டதும் இவ்வாற்றானமையும்.

பரமதத்தன் வேறொருத்தியைமணந்துகொண்டமை பற்றி அம்மையார் சினந்து அவனை 'இவன்' என ஒருமைச்சொல்லால் இழித்துக் கூறினமையால் அவன் இரண்டாவது மணஞ்செய்து கொண்டது குற்றமே எனின்; அவர் 'இவன்' என்று கூறியது பரமதத்தன் மணம்புரிந்து கொண்டமையாலன்று என்பது ஆண்டு இனிது விளங்கிக் கிடக்கும். அதுபற்றி அம்மையார் சினங்கொள்ளவு மில்லை. சினங் கொள்பவராயின் அவன் நிலையைக் கேள்வியுற்றபோதே சினந்து சிலசொற்கள் கூறி யிருப்பர். அவன் தம்மை வணங்கிய போழ்தும் அஞ்சினரே யன்றிச் சினந்திலர். அவன் தான் கொண்ட கொள்கையை யாவருமறியக் கூறிய பின்னரே "ஈங்கிவன் குறித்த கொள்கை யிதுவெனில்" என்றார். அவன் குறித்த கொள்கையாவது "மானுடம் இவர்தா மல்லர்" என்பது முதலியன. அவன் கொள்கை அங்ஙனமாதலை யறிந்த அப்பொழுதே அம்மையார் உலகியலைத் துறந்தவராயினர். அதனால், அவர் பரமதத்தனைக் கணவன் எனக் கருதாது பொதுப்பட நோக்கி 'இவன்' என்றார். உலகியலினீங்கி இறைவன் தமர்களுள் ஒருவராயின அம்மையார் அங்ஙனங் கூறுதலியல்பே. அவர் அங்ஙனம் உலகத்தொடர்பு நீங்கினமையை விளக்கவே ஆசிரியர் சேக்கிழார் அம்மையாரது கூற்றில் வைத்து 'இவன்' என்றார். இன்னும் இவன் என்ற அச் சொல், நகையும் உவகையும் கொல்லும் சினத்தால் விழுங்கப் பட்ட மனத்தொடு கூறியதாகாது, கொன்றைவார் சடையினார் தங் குரைகழல் போற்றிச் சிந்தை ஒன்றிய நோக்கின் மிக்க உணர்வு கொண்டு உரைத்த சொல்லாதல் காண்க. அந்நிலைக்கு முன்னர்ப் பரமதத்தன் வணங்கியபோது "கணவர் தாம் வணங்கக் கண்ட"

என ஆசிரியர் கூறியிருத்தலால், அம்மையாருக்குச் சீற்றமின்றென்பதும், பின்னர் அவனை 'இவன்' என்றது உலகத்தொடர்பு நீங்கினமையானே என்பதும் விளங்கும். அன்றியும், மனந்தூயராய் அறத்தின் வழியொழுகும் ஒழுக்கமுடையார்க்கே வெகுளியும், தீயகூற்றும் அமையாவாயின் இறைவன் திருவருள் பெற்று இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் காணும் இயல்புடையார்க்கு அவை எங்ஙனம் அமையும்? அமையா ஆதலின், அத்தகைய அம்மையாரைச் சீறி விழுந்து சிறுசொற் கூறினாரெனல் வேண்டா.

இது காறும் பரமதத்தனது இயல்பு ஆராயப்பட்டது. இனி அம்மையார்க்கும் அவரது கணவனுக்கும் இருந்த ஒருமைப்பாட்டினை ஆராய்வோம்.

புனிதவதியார் மேற்கூறியவாறு "**மனையறத்தின் பண்பு வழாமையிற் பயில்வார்**" ஆகவே அவர் கணவன்மாட்டு அன்புடையராயிருந்தமை இனிது பெறப்பட்டது. பரமதத்தன் அம்மையார் மாட்டுக் காதலுடையனாயிருந்தனனென்பதில் ஐயமில்லை. பரமதத்தன் அம்மையார் போல இறைவனிடத்தும் அவன் அடியாரிடத்தும் ஓங்கிய அன்புறுகாதல் ஒழிவின்றி மிகப் பெருகும் நிலையிலனாயினும், குலநலத்திலும், ஏனையகுணநலத்திலும், உருவிலும், திருவிலும் அம்மையாரோடு ஒத்தவனாகவே இருந்தனனென்பது மேலே காட்டப்பட்டமையின் உலகியலில் அவ்விருவர்க்கும் ஒத்தஉணர்ச்சி யுளதாதற்குத் தடையின்று. அன்பும் ஒத்தஉணர்ச்சியும் உளவாகவே அவர்தம் வாழ்க்கையை மனமொருமித்து நடத்திவந்தன ரென்பது சொல்லாமையே விளங்கும்.

இதனால் பரமதத்தன் மட்டும் அம்மையார்பாற் காதல் கொண்டிருப்ப அம்மையார் அவன்பாற் காதல் கொண்டிலரெனவும், இதனை "இல்லாளன்," "மனைப்பதியாகிய வணிகன்," "இல்விறைவன்," "கடப்பாட்டில் ஊட்டுவார்" என்று கூறிய சேக்கிழார் சொற்கள் விளக்குமெனவும், அதுபற்றியே இறைவனடியாரை "நாதன்றனடியார்" என்று கூறினாரெனவுங் கொள்ளுதல் பொருத்தமின்று. என்னையெனின், பரமதத்தனை இல்லாளன் முதலிய சொற்களாலன்றிக் "கணவன்," "கணவர்" "கணவனார்" என்றசொற்களாலேயே ஆசிரியர் பெரும்பாலுங் குறித்துள்ளார். அம்மையார் இறைவன்பால் நாயகநாயகி பாவமான அன்புகொண்டிருந்தனரென்பதற்கு அவரது திருமொழியிற் சான்று ஏதுமில்லை. சேக்கிழார் பெருமானும் அங்ஙனங் கூறிற்றிலர். அதற்கு மாறாக அம்மையார் இறைவனை

அப்பனுகக் கருதி அன்புசெய்துவந்தனர் என்பதற்கு அவர் திருமொழியிற் பலசான்றுகள் உள்ளன. அவர் கைலேயை அடைந்தபோது இறைவன் "வருமிவள் நம்மைப்பேணும் அம்மை காண்" எனக்கூறியதும் "அம்மையே" என்று அழைத்ததும், அதுகேட்ட அம்மையார் "அப்பா" என்றுகூறியதும் யாவரும் அறிந்தவை. "கடப்பாட்டில் ஊட்டுவார்" என்றது பின்நிகழ்ச்சிகளுக்குக் காரணமாதல் பற்றிக் கற்புடைமகளிர்க்கு இயல்பாயுள்ள கடப்பாட்டினை விதந்தோதியதன்றிப் பிறிதன்று. அது "கற்புடையமடவார்" என்று அம்மையாரை ஆசிரியர் ஆண்டுக்கூறிய சொற் குறிப்பால் விளங்கும்.

இனிப் "பொருவிடையான் திருவடிக்கீழ்—ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப்பெருக" என்றது அம்மையார்க்கு இறைவன் பாலுள்ள பேரன்பினை விளக்குவதன்றிக் கணவன் மாட்டு அன்பின்மையைக் குறிக்காது. அம்மையார்க்கு இறைவன்பால் அன்பு மிகுந்திருந்ததாயினும் அஃது இளமையிற்றானே உலக நெறியை விலக்கிற்றில்லே. அதனுல் உலகியலேயும் உடன்தழுவி ஞர்என்றலே பொருத்தமுடைத்து.

அன்றியும் அம்மையார் இறுதியில் "இவனுக்காகத்தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி யுடம்பு" என்ருராகலின், அதற்கு முன்னரே இறைவனருளால் தம் தசைப்பொதியுடம்பைநீத்துப் பேய்வடிவத்தைப்பெறுதல் அவருக்குக்கூடுமென்பதும், அங்ஙன மாயினும் அதுசெய்யாவாறு பரமதத்தன் மாட்டுஅவருக்குள்ள அன்பே அவரைத் தடுத்ததென்பதும், பின்னர் அவனது கருத்தறிந்ததுணையானே அதனைநீக்கிப் பேய்வடிவம்பெற்றுக் கைலேக் கேகினர் என்பதும், மேற்கூறியவாறு அவருக்கு அந்நிலே கூடுதற் பொருட்டே பரமதத்தன் கருத்து அத்தகையதாமாறு திருவருள் செய்தது என்பதும் இனிது விளங்குதலால், அம்மையாரும் பரம தத்தன் பால் ஒத்த அன்புடையராய் இருந்தன ரென்பதே துணிபு. இறைவன் திருவடிப்பேறு சிவநெறி நின்ருர்க்கல்லது பிறர்க்குக் கூடாமையால் பரமதத்தன் அதனை யடையாததுபற்றி அவனை உலக நெறியாகிய நல்லொழுக்க மிலனென்ருே அல்லது அவ்விருவர்க்கும் மனவொருமை இல்லே யென்ருே கூறுதல் சாலாது.

இவ்வாற்ருல் காரைக்காலம்மையாரின் கணவனுகிய பரம தத்தனை, சிவநெறியிற் சேராதவனுயினும் உலக நெறியாகிய அறநெறியில் நின்ற ஓர் நன்மகனே எனவும், அம்மையாரது உயர்ந்த நிலேயைப் பரமதத்தன் அறியுங்காறும் அவ்விருவரும் ஒத்த மனமுடையவராகவே இருந்தனரெனவும் கொள்ளுதலே அமைவுடைத்தாம்.

# மனைகெழு மடந்தை

(ஆசிரியர், ஓரம்போகியார் பாடியது)

(ஒரு சிறு கதை)

திரு. வித்துவான், ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்
தமிழாசிரியர், போளூர்.

"நீ ஒரு மனைகெழு மடந்தை; உனக்கு அது தகாது" என்ற பேச்சொலி கேட்டதும், பூஞ்சோலையின் ஓரமே சென்று கொண்டிருந்த பெரியவர், அவ்வொலிவந்தபக்கம் தம் கட்பார்வையைச் செலுத்தினர். உடனே, அவர் மனத்தில், "இதோ, வேம்படிநின்று பேசிக்கொண்டிருக்கும் மகளிரின் பேச்சொலியே இது; இவர்களுள் ஒருத்தி முகம் வாடியும், மற்றொருத்தியின் முகம் அவ்வாறு இன்றியும் இருக்கின்றன; இவர்கள்பால் இப்பேச்சு உண்டாதற்குக் காரணம் யாது?" என்ற எண்ணம் எழுந்தது. அவரை அணுகி, அவர்க்குள்ள செய்தியை அறிவதற்கு ஆர்வமும் பிறந்தது. வேறு ஏதோ ஓர் எண்ணம் பிறக்கவே, அவ்வார்வத்தை யடக்கிக்கொண்டு, சோலையின் தெற்கிலிருந்த பொய்கையின் கரையை யடைந்தார். பகலவனும் மேற்கில் இறங்கி, மேலைக் கடல்நோக்கி விரைந்துகொண்டிருந்தான். அவர் நின்றவிடத்தில் அரசும், அத்தியும் வேம்பும், பூவரசும், நின்று, தம் கிளைகளைப் பரப்பி நிழல் செய்தன. தென்றலும் மெல்லென வீசிக்கொண்டிருந்தது.

அகன்ற அப்பொய்கையில் நீர் நிரம்பித் தெளிந்திருந்தது. கரையோரத்தில் நாணலும் கோரையும் நன்கு வளர்ந்திருந்தன. கரையில் நின்ற தென்னைகளும் காய்தாங்கிக் கவினுற்று விளங்கின. பொய்கையின் கரையருகே இருந்த நன்செய் வயல்களில் நெற்பயிர் விளைந்து கதிர்முற்றித் தலைசாய்ந்து கிடந்தன. சேய்மையில், வரம்புகளில் செறிந்திருந்த புல்லை ஆனினம் மேய்ந்து கொண்டிருந்தன. பாலுண்டு களிக்கும் ஆன்கன்றுகள் மான்கன்றெனத் துள்ளி விளையாட்டயர்ந்தன. பொய்கை விளிம்பில் மலர்ந்திருந்த ஆம்பலை நன்கு மேய்ந்த எருமையினம், வெயிலின் வெப்பந் தாங்காது சேற்றிற் படிந்து உறங்கிக் கிடந்தன. அவற்றைச்சுற்றி, சிறியவும் பெரியவுமாக மீனினம் மேய்ந்து கொண்டிருந்தன. உழுநர்பாட்டும், எருமை மேய்க்கும் இளஞ்சிறுவர் பாட்டும் வயற்புறம் எங்கும் வயங்கியிருந்தன.

தென்றலின்மேன்மையும், செழுமலரின் தீவியமணமும், பெரியவர் உள்ளத்தே இனிய எண்ணங்களை எழுப்பின. இதனால், இவர் வாயின் இதழ்கள் அசைய, இனிய பாட்டொன்று வெளிவருவதாயிற்று. அப்பாட்டில், அவர் கண்முன் தோன்றும் காட்சி முற்றும் இடம் பெற்றிருந்தது. அதனால், இவரோர் நல்லிசைப் புலவராவர் என்பது காண்போர்க்கு இனிது விளங்குவதாயிற்று. திடீரென, பொய்கைக்கண் கலிப்போசை யெழுந்தது. அப் பக்கத்தில் இப்புலவர் தம் பார்வையைச் செலுத்தினர். அதே சமயத்தில், "இதோ பார். எருமை எழுவதினால், அருகிருந்த மீன் கூட்டங்கள் அஞ்சியோடின; வாளைமீன் தண்ணீரில் துள்ளிக் கலிக்கின்றது; இதுவே, இவ்வோசைக்குக் காரணம், வேறில்லை" என்ற பேச்சு புலவர் செவியிற் புக்கது. அவ் வோசை வந்த இடத்தை நோக்கியபோது தாம் முன்கண்ட மகளிர் இருவரும் பொய்கைக் கரையில் வேறொருபக்கத்தில் உட்கார்ந்திருப்பது கண்டார்.

"அவ்வோசை என்நெஞ்சை நடுக்கிவிட்டது; இன்னும் என் உடல் நடுங்குகின்றது, பார்" என்று வாடிய முகத்துடனிருந்த மடந்தை கூறினாள். "முன்பே, வேறோர் எண்ணத்தால் மெலிந்திருக்கின்றாயாதலால், இஃது உனக்குப் பெருநடுக்கத்தை உண்டு பண்ணிவிட்டது. இதோ, இவ்வெருமை எழுந்திருப்பதால், மீன் கூட்டம் அஞ்சி நீங்குவது காண். எழுந்தேகும் அவ் வெருமை பகன்றை படர்ந்து நிற்கும் அவ்வேலியைத் தகர்த்துக்கொண்டு போவதால், அதன்கொம்பில் பகன்றைக்கொடி தன் பூவுடன் சுற்றிக்கொண்டது. அவ்வெருமை செல்லும் செருக்கைப்பார். பொழுது சாய்தல்கண்டு, பகன்றைசூடிய மருப்புடன் செருக்கி ஊர்க்குள்புகும் இவ்வெருமையின்செயல், உன் தலைவன் செயலைபோல் இருக்கிறதன்றோ! ஆகவே தலைவனதுசெயலும் இயற்கையொடு பொருந்தியதேயன்றோ!" எனத் தோழி மடந்தையின் மனநோயை மாற்ற முயன்றாள். இச் சொற்கள் புலவர் செவியிற்புக்கதும், அவர் ஆம்பல்மேய்ந்து, சேற்றிற்படிந்து கிடந்து எழுந்தேகும் எருமை, பகன்றை வேலியைச் சிதர்த்து, அதன்கொடியும் பூவும் தன்கொம்பிற் சூழ்ந்துகொள்ள, அக்கோலத்துடன் ஊர்க்குட்புகும் செயலைக் கண்டு பெருமகிழ்ச்சிகொண்டு, தோழியின் சொல்வன்மையை வியப்பாராயினர்.

**மடந்தை :—** இதன் செய்கைக்கும் நம் தலைவர் செய்கைக்கும் எவ்வகையில் ஒற்றுமை காண்கின்றாய். பெருமையும், போர்மறமும் அவர்க்கே யுரிய சிறப்புப் பண்புகளன்றோ!

**தோழி :—**போர்மறவர் தும்பைசூடி ஊக்கம் கிளரச் செம்மாந்து செருக்களம் புகுவதுபோல, இவ்வெருமையும் பகன்றை சூடி உயர்ந்த மருப்பொடு செருக்கி ஊர்க்குட் புகுகின்றதே.

**மடந்தை :—**(முறு வலித்து) நன்று நன்று. இதன் உடலிற் படிந்திருக்கும் சேற்றை, அவர்மார்பிற்கிடக்கும் சந்தனச்சேறு என்பாய் போலும்.

**தோழி :—**ஆம், அதுமட்டுமா! போர்மறவர் போர்க்களம் புகுந்தால், அவரை வலியிலார் பலர் கூடி மொய்த்துக்கொள்வர். அவர் சிலைத்தெழுந்தவழி அவரனைவரும் சிதறியோட, அவர் செருக்கிச் செல்வர். அதுபோலன்றோ, இவ்வெருமையும், தன்னைச்சூழ இருந்த மீன்கூட்டம் சிதறியோடஎழுந்து செல்கின்றது.

**மடந்தை :—**(பெருமூச்செறிந்து) இத்தகைய பெருவீரம் சிறக்கும் நம்தலைவர் இது செய்யாராயின், யான் எவ்வளவு இன்பமுறுவேன். அஃதிருக்கட்டும்; இஃது அவர்க்கு இயல்பு என்கின்றாயே, எப்படி?

**தோழி :—**மகளிர்க்குக் கருத்தங்கும் காலம் வருமளவும் தலைமக்கட்குப் பரத்தையிற் பிரிவு தகுமெனச்சான்றோர் விதித்திருக்கின்றனர். அதனால், அவர்கள் பரத்தையர் சேரிக்குச் சென்று, நாளும் புதியமகளிரொடு தேரேறிச் சென்று புறவொழுக்கம் பூண்டு ஒழுகுவர். அம்முறையே, நம் தலைவர் புறத்தொழுகி வருகின்றார். அங்ஙனமாக, அவர் புறத்தொழுகுவதைக் கைவிட்டிலர் என நினைந்து நீ புலக்கின்றது முறையன்று.

**மடந்தை :—**ஏன் முறையன்று? புறத்தொழுகித் திரியும் ஆடவரைத் தெருட்டுதற்கு, மனைகெழுமடந்தையர் கொள்ளும் கருவி புலவியல்லது வேறியாது?

**தோழி :—**மடந்தாய், மனைகெழு மடந்தைகட்குப் புலவியே சிறந்தகருவியென்பது ஒக்கும். ஆயினும், மனையறம் வழுவாது ஒழுகும் மடந்தை மனைகெழுமடந்தையாவாள். அவள் அவ்வறத்திற்கு இடையூறு செய்யும் செயல்யாதும் நெஞ்சால் நினைப்பதும்கூடாதே. புலவியால் அது நிகழுமாயின், அதனை எறிட்டும் பார்த்தல் கூடாதன்றோ!

**மடந்தை :—**மனைகெழு மடந்தை, தன்னைக் கொண்டவன் நல்வழியின்நீங்கி, அல்வழிக்கண் செல்லின், அவனைத்தெருட்டும் கடமை உடையளல்லளோ? அதுகுறித்து அவள் புலவியை ஏவல் கொள்வளன்றோ?

**தோழி :**—பரத்தைமை பூண்பது ஆடவர்க்கு இயல்பெனச் சான்றோர் விதித்திருத்தலால், அதனைத் தீதெனக் கடியக் கருதுவது எவ்வாறு அமையும் ?

**மடந்தை :**— புறத்தொழுக்கத்தும், ஆடவர் நெறிகடந்து செல்லுதற்கு இயைபுண்டன்றோ. அவ்விதி வரம்பு கடவாதபடி நிறுத்துதற்கன்றோ சான்றோர் புலவியைப் பொருளாக விதித்துள்ளனர்.

**தோழி :**—ஆகவே, இப்புலவியை மிக்க நயம்படக் கையாளுதல் வேண்டும் என்பது தெரிகிறதன்றோ? இது மிக்க மென்மையுடையது; சிறிது இறுக வலிப்பின், அதனைப் பிணித்து நிற்கும் அன்பு நார் அறுந்து கெடும்; அதனால் வாழ்வும் சீர் குலைந்து விடும்.

**மடந்தை :—(கண்கலங்கி)** என்ன! வாழ்வு சீர்குலைந்து விடுமா? தலைவர் அன்பின்றிக் கைவிட்டு விடுவரோ! அதை நினைத்தால் என் நெஞ்சு கலங்குகின்றதே!

**தோழி :**—புலவிமிக்க வழியே, அவர்பாலும் புலவிமிக்குப் பின் தீராப் புலவியாகி,முடிவில் நெஞ்சுகலங்கத்தக்க நிலைமையை உண்டு பண்ணுவதாம்.

**மடந்தை :**—அது மிகக் கொடிதுபோல இருக்கிறதே?

**தோழி :**—"போல" என்பது என்ன? கொடிது, கொடிதே! அவ்வாறு புலப்பதும், புலந்துறைவதும் மனவன்மைமிக உடைய மகளிர்க்குத்தான் முடியும்.

**மடந்தை :**—அவ்வகையும் உண்டோ?

**தோழி :**—ஐயமென்ன? பலர் உள்ளனர். அவர் வாழ்வும் இரங்கத் தக்கதாகவே உள்ளது.

**மடந்தை :**—அஃதெப்படி இரங்கத்தக்கதாகப் போய் விடுகிறது?

**தோழி :**—ஏன், அது நன்ருகத் தெரிகிறதே? புலவி மிகமிக, புலக்கும் மகளிர் மனத்தில் அன்புகுன்றந்து வன்பு மிகுகிறது. வன்பு மிகின், மனையறத்துக்குரிய அன்பும் அறமும் குன்றும்; அவைகுன்றவே, அவர் மனையிலிருந்து செய்யவள் நீங்குவள்; நீங்கின், செல்வம் குறையும். செல்வம் குறைந்தவழி, வறுமை மிகும்; வறுமைமிகின், விருந்தோம்பு நல்லறம் கெடும்; அதனால் பிறர்க்கெனச் செய்யும் அட்டிற்றொழில் இன்றித் தமக்கே என அட்டுண்ணும் சிறுமையுண்டாகும்;அச்சிறுமையால்நாளடைவில்

தமக்கும் போதிய உணவு இல்லையாம்; உடலும் மெலிந்து திரங்கும்; தேமொழி வழங்கும் புதல்வர் வறுமுலை சுவைத்துப் பசிநோய் நீங்காது வருந்துவர்; புதல்வர் எய்தும் பசிவருத்தம் காண்பதினும் மகளிர்க்கு வேறு துன்பம் வேண்டாவன்றே. முடிவில் அவர், இலரல்லர், உளர்என்னும் மாத்திரையன்றிப்பிறி தொன்றும் இலராவர்.

மடந்தை :—(மனநோய்மிக்கு) இதனையறிந்தால் எத்தகைய மகளிரும் புலக்க நினையார், அல்லவா?

தோழி :—அது தானே இல்லை. இதனையறிந்தும் தம் தலைவருடன் தீராப்புலவி கொண்டு அவரோடு உடன்று அறியாமை எய்தினவர் பலர் இருக்கின்றனரே! அதனாற்றான், புதல்வரைப் பெற்றுப் பயன்படும் மனைகெழு மடந்தையாகிய உனக்குப் புலத்தல் பொருந்தாது என்ற கருத்தினால், "புலத்தல்ஒல்லுமோ மனைகெழுமடந்தை" என்று சொன்னேன்.

மடந்தை :—தோழி, நீ சொன்ன இவ்வளவும் வரம்பு மீறிய புலவியால் விளைவது தானே.

தோழி :—நீ கேட்பது எனக்குத் தெரியும். வரம்பு மீறிய வழி உண்டாகும் தீது இவ்வளவு; எனவே, வரம்புக்கு உட்பட்ட சிறு புலவியால் தீது உண்டாகாது என்று சொல்லிவிடமுடியாது. சிறிது புலக்கினும், அது பின் வன்புக் கேதுவாய், தீராப்புலவிக் கண் செலுத்திவிடும்.

மடந்தை :—ஆனால் ஒன்று கேட்கின்றேன்; தலைவர் நாடோறும் புதுப்புது பரத்தையரைத் தம் தேர்மிசைக் கொணர்ந்து கூடி, அவர் சேரிக்கண்ணே தங்கிவருவது நமக்கு வருத்தம் தருகிறதே, அதனை வெளிப்படுக்காமல் இருக்க முடியுமா? "நெஞ்சின் மிக்கது வாய் சோர்ந்து விடும்" என்று சொல்லுவார்களே பெரியோர்கள். அது புலவிதானே. அவரை அவ்வொழுக்கத்திலிருந்து விலக்குவதுதான், பின்னர் எப்படி? சொல்.

தோழி :—இப்படி யெல்லாம் பேச்சுத் திரும்பு மென்று தானே, நான் தலைவரை, ஊர்க்குட்புகும் எருமையோடு வைத்துக்காட்டினேன்.

**மடந்தை :—** அஃதெப்படி? எனக்கு விளங்கச் சொல்.

**தோழி :—** கேள், பொய்கையில் உள்ள ஆம்பலை மேய்ந்த எருமை சேற்றில் படிந்து கிடந்துவிட்டு, மாலைப்போது வரக் கண்டு, தன்னைச்சுற்றி மொய்த்துக்கொண்டிருந்த மீனும் வரா லினமும் அஞ்சி நீங்கியோடும்படி எழுந்து, பகன்றைக்கொடியும் பூவும் கொம்பிற் சுற்றிக்கொண்டு விளங்க ஊர்க்குள் புகுகின்றது; அதுபோலவே, தலைவரும், பரத்தையர் நலம் நுகர்ந்து, அவர் மனைக்கண்ணே தங்கியிருந்துவிட்டு, உனக்குக் கருத்தங்கும் காலம் வரக்கண்டு, தன்னைச் சூழ்ந்து கிடந்த அப்பரத்தையர் நீங்க, மாலையணிந்த தோளும் மார்பும் உடையராய் உன்மனைக்கு வருகின்றார். இதுதான் இவ்வெருமையின் செயலால் நாம் அறியக்கிடப்பது.

**மடந்தை:—** (முகம்மலர்ந்து) இதுவாயின், அவர் நம்மிடத்தில் அன்பு குறைந்திலர் என்றன்றோ தெரிகிறது?

**தோழி:—** அதிற் சிறிதும் ஐயமேன்? அவர் வருவார்; வரின், அவரை அன்பு கனிந்து வரவேற்பதே உன் கடமை; அது செய்வது தான் உனக்கு அறமாகும். (சுற்றிப்பார்த்து) நாழிகை ஆகிறது; வா, போகலாம்.

மடந்தையும் "நல்லது" என்று சொல்விக் கொண்டே எழுந்தாள். அவளது சுடர்நுதல் சோலைக்கு வரும்போ திருந்தது போலாது ஒளிவிட்டுத் திகழ்வதாயிற்று. அவள் தோழி முன்செல்லத் தான், அழகின்கொழுந்தெழுந்து அசைந் தேகுவது போல நடந்து சென்று தன் அறம் தழைக்கும் பெருமனையை அடைந்தாள்.

இச்சொல்லாட்டை எழுத்துவிடாது நன்கு கேட்டுக்கொண் டிருந்த நல்லிசைப்புலவர், இம்மகளிரின் மனக்கருத்தைவியந்து, இதனை ஓர் இனிய தமிழ்ப்பாட்டாக யாக்கவிரும்பினார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது நல்லிசைப் புலவர்களின் மனக்கோள். அதன்வழிச்செல்லும் அவரது உள்ளம் உடனே இந்நிகழ்ச்சிகளைவிடாது பாட்டுருவாய்ப்படுத்தி வெளியிடுவதாயிற்று. அப்பாட்டு பின்வருமாறு :—

"துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்(பு)

ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முது போத்துத்
தூங்கு சேற்(று)அள்ளல் துஞ்சி, பொழுதுபட,
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக் கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்செறி மள்ளரின் புகுதரும் ஊரன்,
தேர்தர வந்த தெரியிழை, நெகிழ்தோள்,
ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
'பரத்தமை தாங்கலோ இலன்' என வறிது நீ
புலத்தல் ஒல்லுமோ? மனைகெழுமடந்தை!
அது புலந்(து) உறைதல் வல்லி யோரே,
செய்யோள் நீங்கச் சில்பதம் கொழித்து,
தாம் அட்(டு) உண்டு, தமியராகி,
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுதல் அறிந்தும்,
அறியார் அம்ம அஃ(து) உடலுமோரே"

இவ்வினிய பாட்டு, தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றின்கண் ஒன்றாக (316)த் தொகுக்கப் பட்டுள்ளது. ஈண்டுக் காட்டிய நிகழ்ச்சி மிகச் சுருங்கிய சில சொற்களால், "தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகளை நெருங்கிச் சொல்லியது" எனப் பேரறிஞர் ஒருவரால் இப்பாட்டின் கருத்தாக வடித்துக் காட்டப் பெற்றுள்ளது. இதனைக் காணின், மேலே கூறிய நிகழ்ச்சியில் காணப்படாத செய்தியொன்று, இக் கருத்துரையில் இருப்பது புலனாகும். அது, தோழித்லைவனுக்கு வாயில் நேர்ந்த செய்தி. இது தோன்றியதற்கு ஏது, இப் பாட்டினைப் பாடியளித்த நல்லிசைப் புலவரின் நாநலத்தின் சிறப்பாகும். அதனை ஒரு சிறிது காண்போம்.

தோழி, மடந்தையை நோக்கி, "பரத்தைமை தாங்கலோ இலன் என வறிது நீ, புலத்தல் ஒல்லுமோ? மனைகெழு மடந்தை!" என்று கூறுகின்றாள். இக்கூற்றில், "பரத்தைமை தாங்கலோ இலன்" என்பது மடந்தை தோழிக்குக் கூறியதாகும். அது கேட்கும் தோழி, அவளுற்ற வருத்தத்தைத் தானும் உற்று வருந்தும் கடன்மையுடையளாவாள். மேலும், அவன் பிரிவை நினைந்து வருந்தாமல் ஆற்றியிருக்குமாறு அம் மடந்தையைத் தேற்றும்செயலும் அவட்குச்சிறப்பாக உரியது. அதனைச் செய்யாது, இதுபோது, தலைவியாகிய மடந்தையை,

"மனைகெழு மடந்தைக்குப் புலத்தல் சிறிதும் கூடாது; புலந்துறைவோர் மனத்தே வன்புடையாராவர் (உறைதல் வல்லியோரே); தலைவரோடு உடலுவோர் அறிந்தும் அறியாதாரே யாவர்" என நெருங்கிக் கூறுகின்றாள். இதற்குக் காரணம் யாதாக இருக்கலாம்? தலைவன் பரத்தையர் இல்லின்நீங்கி, தன்மனைக்கு வந்திருத்தல்வேண்டும்; அவனொடு மடந்தை புலந்து மறுத்திருத்தல்வேண்டும்; அவன் தோழிபால் வாயில் வேண்டியிருப்பன்; அதனைத் தோழி நேர்ந்து தலைமகளை இவ்வாறு நெருங்கித் தெருட்டி, புலவியால்மறுது அவனை ஏற்குமாறு இவற்றை மொழிந்திருக்கவேண்டும் என்பன உணரக் கிடக்கின்றன.

இவ்வாறு தோழியின்பால் ஆராய்ச்சிக் கிடனாயிருந்த இதனை, அந்த நல்லிசைப்புலவர் தம் நாவன்மையால் பாட்டிடையே தோன்றச் செய்தனர். இவ்வாறு செய்யாவழி, இந்நிகழ்ச்சிகள் ஏதுவும் பயனுமாய் இயைந்து பாட்டளவில் முற்றுப்பெறா. இத்துணைச் சதுரப்பாடமைய இதனைப் பாடிய நல்லிசைப் புலவர் யாவர்? இவர் ஓரம்போகியார் என்னும்பெயர் கொண்ட செந்தமிழ் நல்லிசைப் புலவராவர். இதுபோல், ஐங்குறுநூற்றில் நூறுபாட்டுக்களும், குறுந்தொகை, நற்றிணை முதலிய தொகை நூல்களிலும் சில பாட்டுக்களும் பாடியிருக்கின்றார்.

# கனாக் குழந்தைகள்

திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் M. A.
வரலாற்று விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைகழகம்

[பின்வரும்கட்டுரை சார்லஸ்இலாம்பு என்னும் ஆங்கிலப்புலவர் எழுதியுள்ள "Dream Children: and Reverie," என்னும் கட்டுரையின் மொழி பெயர்ப்பாகும். இவ்வாசிரியர் இயற்கையாகவே கனிந்தஉள்ளமுடையவர். உள்ளக்கிளர்ச்சிகளைத் தெளிவாகப் பிறருக்கு அறிவிக்கக்கூடிய உரைநடை எழுதும்வன்மை வாய்ந்தவர். தன்வாழ்க்கையில் தனக்குவேண்டிய இன்பம் நலம் முதலியவற்றைச் சிறிதும் கருதாது அறிவிழந்து அல்லற்பட்ட பிச்சியாகிய தமக்கையைக் காப்பாற்றவேண்டும்என்ற ஓர்உயர்ந்தநோக்கத்திலேஈடுபட்டவர் ஆவார். மக்கட்பேறு முதலிய இல்லறச்செல்வங்களைப் பெறாதவர் எனினும் குழந்தைகளிடத்துப் பேரன்புடையவர்என்பது இக்கட்டுரையால் நன்கு புலனாகும். கதை கேட்கும் குழந்தைகளின் மனநிலைகளை ஆங்காங்கு சிலசொற்களில் இவர் குறித்துச் செல்வது இன்பந்தரும் இலக்கியப்பகுதியாகும். ஒருசொல்லில் இலக்கியம் உண்டு எனில் அதைஇங்குகாணலாம். முதனூலில் உள்ள பெயர்களையும் மரபுகளையும் தமிழுக்கு ஏற்ப மாற்றி அமைத்ததேயன்றி ஏனையவெல்லாம் முதனூலின் நேர்மொழிபெயர்ப்பே ஆகும்.]

தம் பாட்டன் பாட்டியரின் இளம் பருவக் கதைகளைக் கேட்க குழந்தைகள் ஆசைப்படுதல் இயல்பாகும். அவர் தாங்கள் நேரில் காணாத முன்னோரின் வாழ்க்கையையும் தம் கற்பனைத் திறமையால் சித்தரித்துக் கொள்ளும் ஆற்றலைப் படைத்திருக்கின்றனர். சிற்சில வேளைகளில் அவர்களைப் பற்றித் தமக்குமூத்தோரை உசாவி அறிதலும் உண்டு.

ஒருநாள் மாலைப்பொழுதில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தேன். என் இரு இளங்குழவிகளும் பையநகர்ந்து என்பக்கலில் அமர்ந்தனர். அக்குழந்தைகள், தாங்களும் தங்கள் தந்தையும் வாழ்கின்ற வீட்டைவிட நூறுமடங்கு பெரிதான தஞ்சையிலுள்ள மாளிகையில் வாழ்ந்துவந்த தங்கள் பாட்டியார் மீனாட்சி அம்மையாரின் கதையைக் கேட்க ஆவல் கொண்டனர். அம்மாளிகையைப் பற்றியும் அதில் நிகழ்ந்ததாகச் சொல்லப் படும் அவலச் செயல்களைப்பற்றியும் "கானகக் குழந்தைகள்" என்னும் செய்யுளில் கற்றறிந்திருந்தனர். அவ்வீட்டில் கைத் திறமை வாய்ந்த சிற்பியொருவன் அக்கானகக் குழந்தைகளின் கண்ணீர்மல்கும் கதையினையும் அவற்றின் சிற்றப்பனின்கொடுஞ் செயல்களையும் மரப்பலகையில் செதுக்கியிருந்தனன். ஆனால்

அத்தஞ்சை மாளிகையை அண்மையில் வாங்கின ஒருவன் அச்சிற்ப நயம் விளங்கும் பலகையைத் தான் சென்னையில் எடுத்த புது இல்லத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்தனன் —நான் இதைச் சொல்லிக் கொண்டிருக்கையில் கயற்கண்ணி அச்செயலைக் கண்டிப்பவள்போல் நோக்கினள். அப்பார்வையில் அவள் தாயின் சாயலைக்கண்டு நான் உளம் அழிந்தேன். பின்னர் பாட்டி மீனாட்சியின் கதையைச் சொல்லத் தொடங்கினேன்.

பாட்டி மீனாட்சி மிக நல்லவள்; கடவுளிடத்து அன்புடையவள். அக்கம்பக்கத்தினர் அவளை உயர்வாக மதித்து வந்தனர். அவள் குடியிருந்த வீடு அவளுக்குச் சொந்தமில்லையாயினும் அவ்வீட்டுக்குரியவன் அதைப் பாட்டியிடத்தே விட்டுச் சென்னைக்குச் சென்றனன். அம்மாளிகையின் பெருமைக்கும் பழைமைக்கும் ஏற்றபாங்குடன் அவள் தன் வாழ்க்கையை நடத்திவந்தாள். அவள் காலத்துக்குப் பின்னரே அவ்வீடு பாழடையத் தொடங்கிற்று. அதைக்கண்ட அதன் சொந்தக்காரன் அங்கிருந்த அழகிய பழம் பண்டங்களையெல்லாம் தன் நகர இல்லத்தில் கொண்டுபோய் அமைத்தனன். பண்டைக்காலப் பொருள்களை இன்று கட்டின இல்லில் அமைத்தது முதுகாட்டிலிருக்கும் நடுகற்களைப் புது வீட்டில் கொணர்ந்து வைப்பதை யொக்கும் — இதைக் கேட்ட கண்ணன், அச்செயல் மடமை யாகும் எனக் குறிப்பால் உணர்த்துபவன் போலப் புன்னகை புரிந்தான்.

மீனாட்சி பாட்டி இவ்வுலகை நீத்த அன்று அக்கம் பக்கத்திலுள்ளோரும், பல நாழிகைத் தொலைவில் உள்ள ஊரினரும், ஏழைமக்களும், செல்வருமாகப் பலர் போந்து பிரிந்த மூதாட்டிக்குத் தம் அன்பையும், மதிப்பையும் காட்டினர். அவ்வளவு கோடிமக்களும் அவளுடைய உடலைக்காண வந்ததின் காரணம் அவ்வம்மையாரின் கடவுட் காதலேயாம். தேவார திருவாசகங்கள் எல்லாம் அவளுக்கு மனப்பாடம்—இவ்விடத்தில் கயற்கண்ணி, பாட்டியின் கல்விப் பெருமையையறிந்து வியப்படைந்தவள் போல் தன் இருசிறு கைகளையும் நீட்டி விரித்தனள்—உங்கள் பாட்டி அழகில் மிக்கவள்; நிமிர்ந்த சாயல் உடையவள். அவ்வூரில் அவளை இசைச் செல்வத்தில் வெல்லுதற்கு யாரும் இலர்.—இவ்விதம் நான் சொல்லிவருகையில் கயற்கண்ணி தன்னைமறந்தவளாய் மெல்லிய குரலில் பாடத்தொடங்கினள். அவளை நான் திரும்பிப் பார்த்த போது பாடலை நிறுத்தி விட்டாள்—இளமையில் அவள் இசைத்

திறமை பெரிதும் படைத்தவளாயிருந்தும், பின் நோய்வாய்ப் பட்டு அத்திறமையை யிழந்தகாலத்தும் தன்னுடையஊக்கமும் உணர்ச்சியும் சிறிதும் குறைந்தவளாய்க் காணப்படவில்லை. அவளுடைய அன்பும் அதனுல் மெலியவில்லை.

அப்பெரிய வீட்டில் அவள் ஒரு தனி அறையில் யாதொரு துணையுமின்றி உறங்குவது வழக்கம். அப்படி உறங்கும்போது இரண்டு குழந்தைகள் மாடிப்படியில் ஏறுவதும் இறங்குவதுமா யிருப்பதைக் கனுவில் காண்பதுண்டாம். ஆனால் அவை பாட்டிக்குயாதொருதுன்பமும்செய்வதில்லையாம். எனினும் தன் இளமைப் பருவத்தில் பாட்டிக்குக் கடவுளின்பால் ஆழ்ந்த அன் பில்லாமையால்அவைகளைக்காணும்போதெல்லாம் அச்சங்கொள் வாளாம்.—இதைக்கேட்ட கண்ணன் தனக்குஅச்சமே கிடையா தெனக் காட்டுவான்போல் புருவத்தை நெரித்துக் கண்களை உருட்டி விழித்தான் — பாட்டிதன் பேரப்பிள்ளைகளிடத்தில் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தாள். எங்களை விடுமுறை நாட்களில் அப்பெரிய பழைய வீட்டிற்கு அவள் அழைத்துச் செல்வாள். அப்போது அங்கிருந்த பண்டைக்காலத் தமிழ அரசர்களின் உருவச் சிலைகளைப் பார்த்த வண்ணமாய் நாழி கைகள் பல கழிப்பேன். அப்படி இமைகொட்டாது நோக்கும் பொழுது அச்சிலைகள் உயிர்பெற்று இயங்குவன போலவும் நான் கற்சிலையாய் நிற்பது போலவும் எனக்குத் தோன்றும். அவ்வீடு முழுதுமே சுற்றி வருவதில் எனக்கு இன்பம் அதிகம். அங்கு பல இடங்களில் கிழிந்துபோன, மங்கின திரைகள் தொங்கிக் கொண்டிருக்கும். அதன் பின்புறத்தில் உள்ள பரந்த தோட்டத்தில் உலாவுதற்கு நான் அடிக்கடிச் செல்வேன். அங்கே தோட்டக்காரக் கிழவனைத் தவிர வேறு யாரையும் நான் கண்டதில்லை. எங்கு பார்த்தாலும் மாவும், கொய்யாவும், பலாவும் பழுத்துக் குலுங்கும். ஆனுல் அவற்றைப் பறித்து நான் உண்பதில்லை. வானளாவி, வளர்ந்து, ஓங்கி நிற்கும் தேக்கு, மருதம், கோங்கு, முதலிய பெருமரங்களினிடையே திரிவதிலும், உண்ணுதற்குப் பயனற்றதாய்த் தோற்றத்தில் அழகுடையதாய் உள்ள கோவை முதலிய பழங்களைக் கொய்வ திலும், மணங் கமழும் பொழிலிடையே புற்றரையில் வானத்தை நோக்கிப் படுத்திருப்பதிலும், எலுமிச்சை, நாரத் தைச் செடிகளுக்கருகில் இளம்வெயிலில் அமர்ந்திருப்பதிலும், அவ்விதம் இருக்கும்போது அப்பழங்களோடு நானும் முதிர்ந்து கனிந்துவிட்டேன் என எண்ணுவதிலும், அப்பொழிலின்கண் உள்ள பொய்கையில் சிறுமீன்கள் துள்ளி விழுவதையும் பெரு

வரால் தண்ணீர் மட்டத்துக்குச் சிறிது கீழே அசையாதிருந்து அச்சிறுமீன்களின் கூத்தாட்டைக்கண்டு நகையாடுதல்போல் தோன்றுவதை உற்று நோக்குவதிலும் எனக்கு விருப்பமும் மகிழ்ச்சியும் பெருகும். சுவையுள்ள பழங்களைப் பறித்து உண்ணுதலைக் காட்டிலும் இயற்கை வலையில் அகப்பட்டுக் கிடப்பதே சாலச்சிறந்த தென்பது என் கருத்து. — இந்த விடத்தில் கண்ணன் தாலத்திலிருந்த ஒருகுலை கொடி முந்திரிப் பழத்தைத் தன் தங்கையோடு பங்கிட்டு உண்ண எடுத்தவன் நான் கூறியதைக் கேட்டவுடன் மெல்ல அதைத் தாலத்தில் வைத்துவிட்டான். —

மீனாட்சிபாட்டி உங்கள் பெரியப்பன் மாறன்பால் மாறாத அன்புஉடையவளாயிருந்தாள். அவன் ஒருகட்டழகன்; உணர்ச்சி மிக்குடையவன் ; எங்கட்கெல்லாம் அரசன் போன்றவன். எங்களில் சிலரைப்போல் தனித்திருப்பதை விரும்பானாய்ப்பிள்ளைப் பருவத்திலேயே படபடப்புள்ள பரிமாவேறி ஊர்ப்புறம் முழுதும் சுற்றிவருவான். பாட்டியின்வீட்டின்மேல் பற்றுடையவனாய் இருப்பினும் அதன் நான்கு சுவர்களுக்குள் அவனுடைய உணர்ச்சி கட்டுண்டு கிடப்பதற்கு இசையவில்லை. அவன் செவ்வேளைப்போல் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து காளைப்பருவத்தை யடைந்தனன். நான் இயற்கையிலேயே முடமாய் இருந்ததால் என்னைத் தன்முதுகில் சுமந்து கொண்டு அவன் செல்லுவான். வயதுமுதிர்ந்த காலையில் அவ்வழகனும்முடமானான். அப்பொழுது நான் இளம்பருவத்தில் அவன் எனக்குச் செய்த நன்றியை மறந்தவனாய் அவனுடைய துன்பத்தைஉணர்ந்துஅவனுக்குஆறுதல் கூறினதில்லை. அவன் கடைசியில் இறந்தான். இறந்து ஒரு நாழிகையாவதற்குள் அவன் உடலை விட்டு உயிர் பிரிந்து பலநாள் ஆனதுபோல் தோன்றிற்று. பிறவிக்கும் சாக்காடுக்கும் எவ்வளவு வேறுபாடு! தொடக்கத்தில் அவன் பிரிவைப் பொறுத்தல் கடினமாக எனக்குத்தோன்றவில்லை. சிலநாட்கள்கழிந்தபின் அவனுடைய நிழல் என்னைத்தொடர்ந்து கொண்டேயிருந்தது. அதனால்நான் கண்கலங்காவிடினும் மனங்கலங்கினேன். என்னால்அவனைமறப்பதற்கு முடியவில்லை. அச்சமயத்தில்தான் நான் அவனைஎவ்விதம் நேசித்தேன் என்பது எனக்குப் புலனாயிற்று. அவனுடைய அன்பும் இலாது சினமும் இலாது நான் மிகமிக வருந்தினேன். அவன் உயிர்பெற்று வரவேண்டுமெனக்கடவுளைவேண்டினேன். அவனோடு வழக்கிடுதற்கேனும் அவன் வரவேண்டுமெனவும் அவனில்லாத வாழ்க்கை சுவையிலாப் பேதை வாழ்வு

எனவும்நான் எண்ணினேன். எனதுகாலினை, பிணியினால்இழந்த காலத்து எவ்விதம் அழுங்கினேனோ அவ்விதமேஅவன் பிரிவாற்றாமையால் நான் அழுங்கலுற்றேன்—இங்கே கண்ணனும் கயற் கண்ணியும் அழத்தொடங்கினர். 'பெரியப்பா இறந்ததற்காகத் தான் நாம்துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றோமா?' என வினவினர். அக்கதையைச் சொல்ல வேண்டாமென வேண்டினர். அதை நிறுத்தி, தம் காலஞ்சென்ற தாயின் கதையைச் சொல்லச் சொன்னார்கள். நான் அக்கதையைப் பின்வருமாறு உரைக்கலுற்றேன் :—

உங்கள் அம்மை ஆதிரையை மணந்து கொள்வதற்கு ஏழாண்டுகள் முயன்றேன். — கண்ணனும் கண்ணியும் அறியும் வகையில் பெண்களின் அச்சம், மடம், நாணம்முதலியவற்றைப் பற்றி நான் பேசிக்கொண்டிருக்கையில் திடீரெனத் திரும்பி, கண்ணியின் முகத்தை நோக்கினேன். அவளுடைய கண்களில் பிரிந்த ஆதிரையின் ஆன்மா புலப்பட, நான் என் இல்லக் கிழத்தியைக் காண்கின்றேனா அன்றி என் மகள் கண்ணியைக் காண்கின்றேனா என அறியாது, திகைத்தேன். அக்கண்கள் ஆதிரையின் உருவத்தைப் படம் பிடித்ததுபோல் காட்டவே அவள் நிற்கின்றாளா அன்றேல் என் குழந்தை நிற்கின்றதா என ஐயமும் கொண்டேன். அவ் வொளிவளர் கூந்தல் என்மனையாளுடையதா, குழந்தையுடையதா என்றறியாதுஊசலாடினேன். அவ்வித நிலையில் இமை கொட்டாது நான் பார்த்துக் கொண்டிருக்கையில் இருகுழந்தைகளும் என்கண்முன் மெல்ல மெல்ல மறைய இறுதியில் துன்பம் நிறைந்த முகங்கள் இரண்டு தொலைவில் தோன்றின. அவைபேசுவதாய்ப் புலப்படாவிடினும் அப்பார்வையை நோக்கின போது பேசுவது போல் தோன்றிற்று. "நாங்கள் ஆதிரையின் குழந்தைகள் அல்லேம்; உன் குழந்தைகளும் அல்லேம், குழந்தைகளே அல்லேம். ஆதிரையின் மக்கள் வேறொருவனை "அப்பா" என்றழைக்கின்றனர். நாங்கள் உண்மையில் வெறுங் கனவே! பல்லாயிரம் ஆண்டுகள் காத்திருப்பின், நாங்கள் பிறவியும் பெயரும் பெறக் கூடும்" என்று உரைத்து மறைந்தன அம்மாயக் குழந்தைகள். அத்துடன் யானும் கண் விழித்தேன். நான் எந்தசாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேனோ அதிலேயே உறங்கி விட்டேன் போலும்! என்னுடைய உண்மையுள்ள மணி என்ற நாயும் நாற்காலியின் அடியில் முன்னிருந்தபடியே படுத்துக் கொண்டிருந்தது.

# "அறிதோறறியாமை கண்டற்று"

திரு. K. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் B.A., B.L.,
தஞ்சாவூர்.

மலர்தலை யுலகின்கண் வாழும் அனைத்துயிர்களும் பொதுவாகப் பொறிகளான் அறியும் அறிவே உடையனவாக இருக்க, மக்களுயிர்மட்டும் சிறப்பாக மனத்தான் எண்ணியறியும் இயற்கை யறிவோடு கூடிய கலையறிவாகுஞ் செயற்கையறிவினை உடையதாகின்றதனுன் எல்லாப் பிறப்பினும் மக்கட் பிறப்பு உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. மக்கட் பிறப்புற்றவர் கற்ற கல்வி யறிவாகிய செயற்கை யறிவு முதிர்ந்த ஞான்று அஃது இனியெடுக்கும் பிறப்பிற்கு இயற்கை யறிவாகத் தோன்றி வருமென்ற உண்மைக்கு 'ஒருமைக்கட்டான் கற்றகல்வி யொருவர்க் கெழுமையுமேமாப் புடைத்து' என்ற குறள் சான்று. கல்வி, உயிர் செல்வுழிச்சென் றுதவவே, அறிவிற்குக் காரணம் கல்வியெனப் பெறப்பட்டமையான், கல்வியென்பது அறியாமையைக் கல்லுவதெனப் பொருள்பட்டு, 'கல்வி கரையில' என்புழி நூலையும், 'கேடில்விழுச் செல்வங்கல்வி' என்புழி அறிவையும் உணர்த்தி, நூல், நூலறிவு எனும் பொருள்களிலே பயின்று வழங்குகின்றது. கல்விக்குப் பயன் அறிவு என வழங்கப்பெறுகின்றதேனும் கல்வியும் அறிவும் வேறு வேறு தன்மையன வெனல் அமையும்.

அறிவு உயிரினே டொருங்கியைந்து அதற் கியல்பாக வுள்ளது. அறிவும், அகக்கருவி நான்கனுள் ஒன்ரும்புத்தியும், ஒன்ருகாவென்ற உண்மையினை முதற்கண் ஐயமறத் தெளிதல் ஈண்டு இன்றியமையாதது. "ஆன்மா, அந்தக் கரணங்களோடு இயைபின்றி உடனுய்நிற்கும் வித்தை மாத்திரையே கருவியாகக் கொண்டு வாயில்களை அதிட்டித்தவழி எதிரே தோன்றுவதோர் விடயத்திற் பொதுவகையான் இஃதோர் பொருளென்றறிதலாகிய நிருவிகற்பக் காட்சி முற்பட நிகழுமன்றே! அதன் பின்னர் ஆன்மா, மனத்தை யதிட்டிக்க மனமானது சித்தமாய் நின்று இஃது யாதாகற்பாற்று? என ஒன்றைத் தூக்கிச்சிந்தித்துப்பின்னர் இஃது குற்றியாகற்பாற்று; மகனகற்பாற்று, என ஒன்றைச் சங்கற்பித்தும், அஃதாமோ? அன்ருே? என

ஐயுற்றும் நிச்சயித்தற் கேதுவாகிய வேட்கையை விளைத்து நிற்கும். அதன்பின் ஆன்மா, ஆங்காரத்தை அதிட்டிப்ப, ஆங்காரமானது, குற்றியென்றுதல், மகனென்றுதல் ஒன்றை நிச்சயிப்பேன் யான், என்னும் அகந்தை விளைத்து நிச்சயித்தற்கண் முயலும் ஊக்கத்தை உண்டாக்கி அதற்கேதுவாகப் பிராண வாயுவையும் இயக்கி நிற்கும். அதன்பின் ஆன்மா, புத்தியை அதிட்டிப்பப் புத்தியானது, இவன்மகன், இதுகுற்றி, இது குடம், இது ஆடை என அவ்வப்பொருள்களைப் பெயர், சாதி முதலியனபற்றிச் சிறப்பு வகையாற் றுணிதலாகிய சவிகற்பக் காட்சியோடுண்டு நிச்சயித்தலெனப் படுமென்க" எனச்சிவஞான மாபாடியத்துள் கூறப்படுதலான் யாதாமொன்றை நிருவிகற்பக் காட்சியா லுணர்த்தும் அறிவும், சவிகற்பக் காட்சியின ஐயமற அறிவுறுத்தும் புத்தியும் வேறு வேறு எனத் துணியப்பெறும். உயிர்களைப் பிறவியுள துணையும் துன்பத்திலழுத்திப் பிணித்துச் சூழ்ந்துள்ள இருண்மலத்தை நீக்க அறிவு உதவுமாதலான் அது வையகத்தில் வாழ்வாங்கு வாழத்தகுந்த வாழ்க்கைக்கு இன்றியமையாத தென்பதூம், உயிர்க்கு அரணுதலென்பதூம் உய்த்துணப்பெறும்.

மக்கள் நூல்களைக் கற்றலினுல் நுண்பொருள்களை ஒரு தலையாக அறிந்தும் ஆய்ந்து கொள்ளலாமெனினும், நூற் பொருள்களைப் பற்றிக் கற்றறிவுடையார் தேர்ந்து தெளிந்திருக் கின்ற அளவானது அவர்கள் நூல்களைப்பயின்று கற்ற கல்வியின் அளவைக் காட்டுவதல்லாது, அன்னூர்பெற்றஅறிவின் அளவைக் காட்டுகின்றதில்லை யென்பது தேற்றம். சிந்திப்பின் ஒருவனது அறிவுநிலை கல்வி நிலைபோன்று அவன் ஆராய்ந்து பயின்றுள நுண்பொருள்களினுல் நேராக எய்திய பயன் என்பதற்கு இடனேயின்று. பின்னர் அறிவை மிகையுங் குறையுமின்றி தேர்ந்தளக்கும் கருவி யாதெனின், அஃது அறியாமையே யென்பது புலத்துறை முற்றிய சான்றோர்களது துணிபு.

கற்றறிந்தரெவர் தம்முடைய அறிவின்மையை அறிந் தாரோ, அவரே மயர்வறமதிநலஞ் சான்ற அறிஞர். இடையருது நூற்பொருளை ஆராய்ந்து கல்வியுடையார் எய்தும் எல்லா நலங்களையும் பெற்ற ஒருவர், அறிதற்குரியன பல இருப்பினும், தாமறிந்தவைகளைக் கொண்டு தம்மையே அறி வுடையாரென மதித்திருப்பவர், தம்முடைய அறியாமையையே உணராதவர். இவரது நிலை உண்ணுநீர் வேட்டோன் பேய்த் தேர் கண்டின்புற்றுற் போன்றது. இத்தகையார் 'தாங்

தம்மைப் பீழிக்கும் பீழை செறுவார்க்குஞ் செய்தலரிது'. இவர் பாலிருந்த அறிவென்ற திருவும், பிரியுங்கால், அறியாமையை அறியாத அறியாமையால் இவர் தமக்கும்பிறர்க்கும் கேடுசூழும் தறுகணாளரெனக் கொண்டு, தன்னை இதுகாறும் உடையரா யிருந்தாரைப் பிறரெள்ளப் பீடின்றிப் பிரியும்.

பன்னூல்களையும் பயின்று அவற்றின் பொருளை நுண்ணிதின் ஆராய்ந்துணர்ந்த அறிவுடையார், 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? யாரறிவார்! எனச் செருக்கழிந்து ('செருக்குற வழியுங் கற்ற கல்விபோற் சிதையுமன்றே'— திருவிளையாடற்புராணம்). அறிவால் முகக்கும் அரும் பொருள்கள் பலவுள வெனவோர்ந்து, தாம் அறிதற்கிருப்பன வற்றை நினைக்குங்கால், தாம்பெற்ற அறிவுடைமை முழுமை யற்றுத் தோன்றவே, அது பயனுடைய தாகாதெனமேற் கொண்டு, தம் அறியாமை மிகுதியாயிருக்கின்றதென்பதை, அறிவரேல், அவர் பொருளுண்மை காணத்தக்க அறிவுடையோ ரென மதிக்கத்தக்கவராவர். இவர் தாம் மருணீங்கி மாசறு காட்சியவர். நூலின் பொருளை உள்ளவாறுணரும் அறிவின் அளவாலன்றி; அறியாமையைக் கொண்டு அறிவை அளத்தலே நெறியாகும்.

கற்றுணர்ந்து அறிவு கைவரப்பெற்றோர் தம்அறியாமையின் தன்மையினை மயக்கற நன்குணர அறிவுறுத்துவது கல்வியெனக் கொண்டு மேலுஞ்சில கற்பின் முன் அறியாத நுண்பொருள் பலவற்றை அறிய அவாவுவார். 'தொட்டனைத் தூறு மணற் கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறு மறிவு' எனக் கூர்த்த அறிவிற் சீர்த்த கல்வியராகிய முதற்பாவலர் குறிப்பதனான் மக்கள் நூல்களைப் பயிலும் அளவிற்கேற்ப, அவர்களது அறிவு நுட்பமுற்று அறியாமையின் பெருக்கத்தைத் தோற்றுவிக்கு மென்பது பெறப்படும். அறியாமையை அளவிடற் பாலது அறிவேயென்று மீண்டும் 'அறிதோறு அறியாமை கண்டற்று' என்று மெய்த்த பெருநாவலர் கூறுமிடமுங் கவனிக்கற்பாற்றும். கல்வியால் அறிவு விளக்க மெய்தி ஊற, அவ்வறிவால் அறியாமையை அறிந்துவருதல் கண்கூடாகலின் அங்ஙனம் அறியாமையின் அளவையறிந்து, ஓரளவு அறிவும்பெற்றவழி, கண்ணுடையராகின்றார் கற்றார். அதனானும் நல்வினையுடைய ராகவுமாகின்றார். இதனுண்மையைக் காணுங் காட்சியறிவு வாய்க்கப் பெறாதவர் தீவினையுடையராய் விலங்கிற் கேற்ற மாயஉணர்ச்சியை நிகர்த்துநிற்றலின் கண்ணில்லாதவரேயாவர்.

கல்வியைக் கற்றலன்றி அறிவுவளராதாகலான், கற்றவர், அறிவு தமக்குள தென்று கருதிச்செருக்குற்று, அறிவினால் எய்திய அறியாமையை உணராது கற்றடங்கலாற்றுதல் என்ற செவ்வழி யொழுகாராயின், அவர்களினும்பேதையரில்லை. மெய்ப்பொருட் குரவரான தாயுமானச் செல்வனார், 'யாதேனுமறியா வெறுந் துரும்பன்' என எடுத்துரைப்பதும் ஈண்டுச்சிந் திக்கற்பாலது. எனவே கற்றறிந்தோர் தமது அறியாமைக்கு அடங்கி ஒழுகி நிற்றல் அறிவுடைத்தாம் என்பது விதியாயிற்று. இங்ஙனம் வழுவாமை நிற்றற் பொருட்டே கல்வியும் கற்கப்படுவது.

இடையறாது நூற்பொருளை ஆராய்ந்த முதிர்ச்சியால் தான் அறிந்தது இவ்வளவு என்பதை நுண்ணிதினறிந்து அறியாமையை அளந்துகொண்டவர் நற்பண்பு, நற்செய்கையுடைய ராய்ப் பொறுத்தலும் புரிதலும் தம் கடனென ஓர்வார். அன்னார், உண்மையறிவு வாய்க்கப் பெறவே, அறியாமையைத் தெளிந்து மன அமைதிகொண்டு புலன்கள் உலகப்பொருட்களை நாடோறும் அவாவித் தொடருந்தோறும், துன்பம் தொடராநிற்றலைக் கண்டு, புலன்களை யடக்கி, ஊழான் எய்தற்பாலதாய வருத்தம் தரும் துன்பத்தை உள்ளத்தின்கண் புகவிடாது, நூற்பொருளை ஆராய்ந்து தம்மனனை ஒருவழி நிறுத்திப் பழி பாவத் திற்கு இடனின்றிக் கற்றநெறி உளமொப்ப வொழுகி வாழ்வார். வாழ்க்கையின் வைப்பாகிய அமைதியைப்பெற்று, அறியாமை யைத் தெளிந்த இத்தகைய நடுநிலை திறம்பாக்குணநலஞ் சான்ற பெரியோர் மற்றவர் அறியாமையை அறியும் அறிவின்மையால் 'தாம் யாதுசெய்கின்றோமென்று அறியாது நிரயத்து வீழ்த்தும் பழிபாவச்செயல்களையியற்றி, உய்யும் வழியறியாது அறியாமை யில் உழல்வதை, உண்மைகாணும் நோக்கத்தோடுணரக் கூடிய ராவ ரென்பது,

'தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர் கொலென்று
பரிவ தூஉஞ் சான்றோர் கடன்.'

என்ற நாலடிச்செய்யுளில் நன்கு விளக்கப்பெற்று வலியுறுத்தப் பட்டது காண்க.

கற்குந் தொழில் புல்லிய நோக்கங்கொண்டு இக்காலத்தில் நடைபெறுதலான் ஒளியையும் புகழையும் ஒருங்கே நல்கும் ஒப்புயர்வற்ற மெய்க்கல்வி சிறப்புப் பெறுவது மிக்க அருமை.

இக்காலக்கல்வியும் கல்வியினாலாய பயனும் முற்றிலும் பெற்று விட்டதாகக் கருதி, கற்றவழி யொழுகாது நிற்கும் கற்றவர், தாம் கற்ற நல்லறிவுரைகளையும் இன்பமெய்தும்நல்வழி யையும் சொல்லளவாவதன்றிச் செய்கையில் காட்டலியலாதவ ராய், சான்றோர் அருவருப்புக்கொள்ளும் வண்ண மொழுகுத லான் அவர்கள் தாம் கெட்டதுமல்லாது உலகத்திடையேனை மக்களையுங் கெடுக்கின்றனர். இத்தகையர் அறிவென்ற பெய ரிடப்பட்ட அறியாமைக் குழியில் அல்லலுற்று அழுங்குதலான் இக்காலத்தே வழங்கிவரும் கற்குந்தொழில் இழிவையும் பழி யையும் கொடுத்ததேயல்லாது, ஒழுக்கத்தின் விழுப்பத்தை யாவர்க்கும் அளித்ததாய் அறிதற்கில்லை. அறியாமையைஅறி யாததால் வரும் அல்லல்களை உணராத கற்றவர் கற்றும் அறி விலாதவராயினர். வாழ்க்கையினமைதியைச் சிதைவுறாது காக்க வல்லுநராகிய கல்லாதார்பால், கற்றவரிடம் காணப்படும் மனம் ஒருங்கி நிற்றலின்மை, நடுவு நிலையின்மை, வாய்மையின்மை. இறைபணிதலின்மை, எவ்வுயிர்க்கும் அன்பும் அருளுமின்மை, நல்லொழுக்கமின்மை முதலியன காணப்படாமையால், கல்லாத வர் அறவோரெனக் கூறின் நேரிதேயெனக் கருதவேண்டியிருக் கிறது. அறியாமையால்யாதுந் தீதில்லை யென்பது ஈண்டுநினை விற்குக் கொணரற்பாலது. அறியாததொன்றை அறிந்ததாய்க காட்டிக் கொள்வதைக் கற்றார், எளிதிலே தவிர்க்க வொண்ணாத எவ்வமுடையராய்த் தாமே துன்பக்கடலில் அமிழ்ந்து கரை காணாது வருந்துவது எத்துணை மடமையாகும்!

கல்வியறிவால் அறிவை அறிய பிறப்பறுமாதலான் கற்ற தனாலாய பயன் தனக்கு உவமையில்லாதான் திருவடிகளைச் சிந்தித்து வணங்கு முறை தெரிந்து கோடலும், உலகியற் பொருளைப் பொய்ம்மையெனவும் நிலையாமை யுடைத்தெனவும் உணர்ந்துகோடலும், பிறவிகள் வினைதர வருதலின் பிறவி நீக் கத்திற்குரிய செவ்வழியையும், வீடு பெறுதற்கேற்ற நிலைமை யையும் ஆய்ந்துகோடலுமே யல்லாது வேறின்றென அறிவின் செய்தியை நன்கறிந்த செந்நாப் போதார் சாற்றியிருக்க, இத்துறைகளைக் கருதாது, நிறைந்த அறிவைப் பெறுதல் வேண்டுமென ஊக்கங்கொண்டு உலகமாந்தர் பலர் தம்மறிவை வழியல்லா வழியில் செலுத்தி பேயின் வாய்ப்பட்டு இன்னல் களும் இடர்ப்பாடுகளும் கொன்னே வருவித்துக் கொள்ளு கின்றனர். அறிவென்பது யாதென ஆராயப் புகுங்கால் அஃது கற்றறிவுடையார்க்கே எளிதே வாய்ப்பதென்றும்

அதனை அதற்குரிய வரம்பு கடவாமல் பயன்கொள்ளும் நெறியறிந்து ஏற்றுக்கொள்வதற்குரியதென்றும் கூறலாம். இன்னும் பார்க்கின், ஒருவன் அறிவினது தளைப்பினுட்படாது அளவிறந்த அறிவிற்கு அண்ணாந்துநிற்பானாகில், அவன் அறிவின் விரிவினால் உணர்ந்ததை ஒன்றோடொன்று முரணியவழி அவற்றுள் மெய்யிது பொய்யிதுவெனத் தெளியாது மனந்திரிந்து குளிக்கப் போய்ச்சேறுபூசிக்கொள்ளும் இழிந்த நிலைமையை எய்துவான். சற்று உற்றுச் சிந்திக்குங்கால் அறிவினிடம் பேயின் குணமிருக்கிறதென்று தெளிவாக அறியலாம். அறிவையே தளையினுட்படாது மேம்படுத்திக் கொண்டு செல்பவர், வெல்லாமல் எவரையும் வெருட்டிவிட வகைதந்த வீண் வித்தையைமற்றும் கற்று, அல்லலைத்தாமே தமக்கு ஆக்கிக்கொண்டு, வாழ்க்கையின் நோக்கம் மெய்யுணர்வு கைவரப் பெறுதலென்பதை உணராது, இடர்ப்பட்டு மயங்கியிருப்பர். ஆதலின், அறியாமையை அறிதலே மேதக்க மெய்யின்பத்தை நல்குவதாம் என்றும், தாமே அறிவிற் சிறந்தவரெனப் பெருமைகொண்டு தமதறிவை ஓயாது நிலை கலங்கும்படி தம்மைத் தாம் காக்க வல்லாரல்லராய்ச் செலுத்தி அலமரலுற ஆய்வார் இழுதையென்றும் கண்டாம்.

உ

# தமிழ்ச்செய்திகள்

இராவ்பகதூர்,

## சர். ஆ. தா. பன்னீர்ச்செல்வம் அவர்கள்

பார்-அட்-லா

மன்னுதமிழ் போற்ற மடிதற்று நின்றசெல்வம்
மன்னர் தமதாணை மேற்கொண்டே—முன்னியதம்
வேலை படர்வேலை வேலை புகுந்தாரென்
றேலா வுரைகேட்டோ மின்று.

நேசர் செயலிழந்தார் நெஞ்சம் நினைவிழந்த
வாசம் மலரிழந்த வான்வழிக்கொள்—ஈசன்
விழிமிடைந்த தாரெம் வேந்தனவன் நீங்க
எழிலிழந்த தந்தோ இவண்.

ஈரா னெனும்பெயர்பெற் றெம்முளத்தை யீர்கடலே!
பாரோர் புகழ்பன்னீர்ச் செல்வர்தாம்—ஆராயின்
நின்னகத்துட் புக்கனரோ நீணிலத்துப் போந்தனரோ
என்னுரைப்பா யெங்கட் கினி.

பண்டு மொருகாலெம் பைந்தமிழர் செல்வத்தைக்
கொண்டு கடல்பழியைக் கொண்டதால்—அண்டமுற
விண்ணூர்தி யிற்செல்லும் மெய்த்தமிழர் செல்வத்தைத்
தண்ணீர்க்கு ளாக்கினதோ தான்.

பல்ல நினைந்தென்னும் பைந்தமிழர் செல்வமென்பார்
எல்லா ருளத்து மினிதிருந்தார்—நல்லோர்தாம்
மன்னு வுலகத்து மன்னு புகழ்வடிவை
புன்னு வினிவாழ்த்து வோம்.